2010 மே 5]

இணைப்பு-V

(572 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

அறிவிப்புகள், 2010–2011

1. சாலை மற்றும் பாலப் பணிகளுக்கு மாநில அரசின் நிதி ஒதுக்கீடு

அரசின் பராமரிப்பில் உள்ள சாலை மற்றும் பாலங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடப்பு நிதியாண்டுக்கு மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.4,049 கோடியை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

சாலைப் பணிகள்

சாலைப் பணிகளில் திட்டப் பணிகளுக்கு ரூ.2,225 கோடியும், திட்டம் சாராப் பணிகளுக்கு ரூ.653 கோடியும் ஒதுக்கப்படும். இதன்மூலம் சுமார் 5,000 கி.மீ. சாலைகளை அகலப்படுத்தவும், மேம்படுத்தவும் மற்றும் சுமார் 5,000 சாலைகளை பராமரிக்கவும் வழிவகை செய்யப்படும்.

பாலப் பணிகள்

பாலப் பணிகளுக்காக நடப்பாண்டில் ரூ.1,171 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியைப் பயன்படுத்தி ஏற்கெனவே நடைபெற்று வரும் 273 பாலப் பணிகளும் மற்றும் புதிதாக எடுக்கப்படவுள்ள 96 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

2. சென்னை அண்ணாசாலையில் மேம்பாலங்கள்

ரூ.500 கோடி மதிப்பீில், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தில், அண்ணா சாலையில் புதிய சட்டப் பேரவை வளாகத்திற்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கும் இடையே துவங்கி பட்டுலாஸ் சாலை சந்திப்பு வரை சுமார் 2.00 கி.மீ நீளத்திற்கும், அண்ணா அறிவாலயம் அருகே

[2010 மே 5

துவங்கி சைதாப்பேட்டை மாம்பலம் கால்வாய் வரை சுமார் 3.00 கி.மீ. நீளத்திற்கும் இரண்டு சாலை மேம்பாலங்கள் கட்டப்படும். சென்னைப் பெருநகர் இரயில் திட்டம் இச்சாலையில் செயல்படுத்தப்படவுள்ளதால் இந்த மேம்பாலங்களுக்கான தாங்கு தூண்கள் (Piles) நடப்பாண்டில் முடிக்கப்படும். இம்மேம்பாலங்களுக்கான மேல் தூண்கள் மற்றும் தளங்கள் சென்னைப் பெருநகர் இரயில் திட்டப்பணிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

3. சென்னை இராஜீவ் காந்தி சாலையில் மேம்பாலங்கள்

சென்னை இராஜீவ் காந்தி சாலை, மத்திய கைலாஷில் துவங்கி சிறுசேரி வரை (சுமார் 20 கி.மீ. நீளம்) முதற்கட்டமாக அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. ரூ.171 கோடி மதிப்பில், இச்சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் பின்வரும் ஐந்து சந்திப்புகளில் சாலை மேம்பாலங்கள் கட்டப்படும்.

1. திருவான்மியூர்—தரமணி சாலை சந்திப்பு
2. எஸ்.ஆர்.பி. டூல்ஸ்—தரமணி இணைப்பு சாலை சந்திப்பு
3. பெருங்குடி சாலை சந்திப்பு
4. துரைப்பாக்கம்—பல்லாவரம் சாலை சந்திப்பு
5. சோழிங்கநல்லூர் சாலை சந்திப்பு

4. கோவை மேற்குப் பகுதி புறவழிச்சாலை

4. ரூ.284 கோடி மதிப்பில், கோவை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் தே.நெ. 47 இல் கோவை புதூரில் துவங்கி, பேரூர், வீரகேரளம், வடவள்ளி, சோமயம்பாளையம் வழியாக தே.நெ. 67-இல் துடியலூரில் இணையும் வகையில் சுமார் 26 கி.மீ. நீளத்திற்கு புறவழிச்சாலை அமைக்கப்படும். இச்சாலை கடின புருவங்களுடன்கூடிய நான்கு வழித்தடச்சாலையாக அமைய உள்ளது.

2010 மே 5]

5. புறவழிச் சாலைகள்

பின்வரும் நகரங்களில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் மற்றும் நேர்வழிப் போக்குவரத்து தடையின்று நடைபெறவும் புறவழிச்சாலை அமைக்கும் பணிகளுக்காக நடப்பாண்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்:

1. திருநெல்வேலி
2. அம்பாசமுத்திரம்
3. தென்காசி
4. சங்கரன்கோவில்
5. சிவகங்கை
6. முதுகுளத்தூர்
7. நாமக்கல்
8. திருச்செங்கோடு
9. பவானி
10. மணச்சநல்லூர்
11. மயிலாடுதுறை
12. மன்னார்குடி
13. கடலூர்
14. வேலூர்
15. திருப்பத்தூர் (வேலூர்)
16. ஆற்காடு
17. திருவண்ணாமலை
18. திருவள்ளூர்
19. திருத்தணி

சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

6. மாநகராட்சிப் பகுதிகளில் பாவு தளங்களுடன் சாலை அமைத்தல்

மாநகராட்சி எல்லைகளுக்குள் உள்ள நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளில் அவற்றின் மொத்த அகலத்திற்கும் வடிகால் பாவு தளங்களுடன் கூடியதான சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த வசதி, கட்டடங்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் ஏற்படுத்தப்படும்.

7. வழிபாட்டுத் தலங்களின் சாலைகளை மேம்பாடு செய்தல்

பாரம்பரிய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கும் வகையில் சாலைகள் மேம்பாடு செய்யப்படும்.

8. சாலை சந்திப்புகளை மேம்பாடு செய்தல்

மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் வந்து இணையும் பிற அரசு சாலை சந்திப்புகளை, மேம்பாடு செய்து, சீரான போக்குவரத்து ஏற்படுத்தும் வகையில் நடப்பாண்டில் 800 இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

9. சாலை மற்றும் நடைபாதையினை சுத்தப்படுத்தும் கருவிகள் கொள்முதல் செய்தல்

சென்னை மற்றும் மதுரை மாநகராட்சி எல்லைப் பகுதிகளில் சாலை மற்றும் நடை பாதையினை சுத்தப்படுத்த ரூ.1 கோடி மதிப்பில் இரண்டு இயந்திர சுத்தப்படுத்தும் கருவிகள் நடப்பாண்டில் கொள்முதல் செய்யப்படும்.

10. இரயில்வே கடவில் புதிய சாலை மேம்பாலங்கள்

இரயில்வே திட்டப் பணிகளின்கீழ் ரூ. 318.53 கோடி மதிப்பில் பின்வரும் 13 இரயில்வே கடவுகளில் புதிய சாலை மேம்பாலங்கள் அமைக்கும் பணி நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

2010 மே 5]

ரூ. கோடியில்

வ. எண்	கடவு எண்	தொகுதி	அமைவிடம்	திட்ட மதிப்பீடு
1.		திருச்சி–1	திருச்சிராப்பள்ளி இரயில் சந்திப்பு அருகில் பழமையான இரயில்வே பாலம் எண் 1136–க்கு பதிலாக	66.00
2.		ஸ்ரீரங்கம்	திருவானைகோவில் அருகில் பழமையான இரயில்வே பாலம் எண் 380A-க்கு பதிலாக	54.00
3.	22	ஒரத்தநாடு	நீடாமங்கலம்	18.64
4.	16	திருவள்ளூர்	புட்லூர் செவ்வாய்பேட்டை அருகே	19.24
5.	124	ஈரோடு	பெரிய சதயாம்பாளையம், ஈரோடு	19.54
6.	18	திருநெல்வேலி	திருநெல்வேலி கிடங்கு	12.43
7.	2	பூந்தமல்லி	பட்டாபிராம் மற்றும் பட்டாபிராம் கிடங்கு இடையில்	18.34
8.	2	விழுப்புரம்	விழுப்புரம் மற்றும் வெங்கடேசபுரம் இடையில்	17.74
9.	4	சிங்காநல்லூர்	இருகூர் மற்றும் பீளமேடு இடையில்	18.34
10.	7	சிங்காநல்லூர்	இருகூர் மற்றும் பீளமேடு இடையில்	18.34
11.	10	கோயம்புத்தூர் கிழக்கு	பீளமேடு மற்றும் கோயம்புத்தூர் வடக்கு இடையில்	18.34
12.	131	திருப்பூர்	ஊத்துக்குளி மற்றும் திருப்பூர் இரயில் நிலையங்களுக்கிடையில்	19.54
13.	309	திண்டுக்கல்	திண்டுக்கல் கிடங்குக்கு அருகாமையில்	18.04

[2010 மே 5

11. White topping என்ற புதிய யுக்தியில் சாலை ஓடுதளத்தை சீரமைத்தல்

நடப்பாண்டில் போக்குவரத்துச் செறிவின் காரணமாக பழுதடைந்த தார்ச் சாலைத் தளங்களில், சிமெண்ட் கற்கலவையினைக் (Plain cement concrete) கொண்டு White topping என்ற புதிய யுக்தியைக் கையாண்டு சாலையின் ஓடுதள தன்மைக்கேற்ப சோதனை முறையில் நடப்பாண்டில் அமைக்கப்படும்.

12. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு தேவையான கருவிகள் வாங்குதல் மற்றும் புதிய ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ளுதல்.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள நிலக்கீல் ஆய்வகம், கற்கலவை ஆய்வகம் மற்றும் மண் பரிசோதனைக் கூடம் ஆகிய ஆய்வகங்களுக்குத் தேவையான பரிசோதனைக் கருவிகள் ரூ. 2 கோடி செலவில் வாங்கவும் மற்றும் புதிய ஆராய்ச்சிப் பணிகள் ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பாலங்களின் வடிவமைப்புப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக கணினி மென்பொருள் வாங்குதல்

துறையின்மூலம் செயல்படுத்தப்படும் பாலங்களின் வடிவமைப்பு பணிகளை விரைவுபடுத்துவதற்கு ரூ.1 கோடி மதிப்பில் கணினி மென்பொருள்கள் தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு) அலுவலகம் மற்றும் ஆய்வுக் கோட்ட அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14. ஆய்வுக் கோட்ட அலுவலகங்களுக்கு நில அளவை நவீனக் கருவி வாங்குதல்

துறையின்மூலம் செயல்படுத்தப்படும் சாலை மற்றும் பால ஆய்வுப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக ஆய்வுக் கோட்ட அலுவலங்களுக்கு நில அளவை நவீனக் கருவிகள் ரூ.1 கோடி செலவில் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2010 மே 5]

15. நெடுஞ்சாலைகளின் எல்லைக் கற்கள் அமைத்தல்

நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்கும் நோக்கோடு மாநில நெடுஞ்சாலைகளில் எல்லைக் கற்கள் அமைக்கப்பட்டு, மாவட்ட முக்கிய சாலைகளில் எல்லைக் கற்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் மாவட்ட இதர சாலைகளில் எல்லைக் கற்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

16. நெடுஞ்சாலைத் துறைக்கு ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுதல்

நெடுஞ்சாலைத் துறையின் அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்குமான ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கட்டட வளாகத்தில் கட்டப்படும்.

17. நெடுஞ்சாலைத் துறை வட்ட, கோட்ட அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்

வட்ட, கோட்ட அலுவலகங்களுக்கு மற்றும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய மண்டல அலுவலகங்களுக்கு புதிதாகக் கட்டடம் கட்டுதல்.

1. சென்னை மற்றும் விழுப்புரம் வட்ட அலுவலகங்கள்
2. திருவள்ளூர், வாணியம்பாடி, நாகப்பட்டினம், தாராபுரம் மற்றும் திருப்பூர் கோட்ட அலுவலகங்கள்
3. நாகப்பட்டினம் உட்கோட்டம்
4. திருச்சி, விழுப்புரம் மற்றும் சேலத்திற்கு மண்டல ஆய்வகக் கட்டடங்கள் என ஒன்பது கட்டடங்கள் ரூ.3.48 கோடி மதிப்பில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

18. மாவட்டத் தலைநகரங்களுக்கான போக்குவரத்து மேம்பாட்டு ஆய்வு

மாவட்டத் தலைநகரங்களில் பெருகி வரும் போக்குவரத்தை எதிர்கொள்ளும் வகையில் குறுகிய மற்றும் நீண்ட காலத் தேவைகளைக் கண்டறிந்து போக்குவரத்துச் செறிவின்

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அடிப்படையில் சாலைகளை அகலப்படுத்துதல், மேம்பாடு செய்தல், சாலை சந்திப்புகள் மற்றும் வளைவுகளை மேம்படுத்துதல், சாலை மேம்பாலங்கள் கட்டுதல் மற்றும் சுரங்க நடைபாதைகள் அமைத்தல் ஆகிய பணிகளைக் கண்டறியும் ஆய்வு அறிக்கை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் உதவியோடு நெடுஞ்சாலைக் கோட்ட அளவில் தயாரிக்கப்படும் அதன் அடிப்படையில் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

19. சாலை முன்னுரிமை தேர்வு (SOS-II)

தற்போது உலக வங்கி உதவியுடன் ரூ.2,442 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. சாலை மேம்பாட்டு திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளில், தொழில்நுட்ப மற்றும் பொருளாதார அடிப்படையில், ஆலோசகர் மூலம் 18,000 கி.மீ. நீளச் சாலைகள் தெரிவு செய்யப்பட்டு, அவ்வாய்வின் அடிப்படையில், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடம் இருந்து நிதி உதவி பெற்று, மேம்பாடு செய்யப்படும்.

20. கடல்சார் வாரியம்மூலம் பயிற்சி அளித்தல்

தமிழ்நாடு கடல்சார் வாரியப் பயிற்சி நிறுவனத்தில் ஆதி திராவிடர் நலத்துறை கேட்டுக்கொண்டபடி 40 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

21. கடலூர் துறைமுக மேம்பாடு

கடலூர் துறைமுகத்தின் மேம்பாட்டிற்காகத் தேவைப்படும், அதிக அளவிலான தனியார் முதலீட்டை ஈர்ப்பதற்காக, பொது மற்றும் தனியார் முதலீட்டின் மூலமாக (Private Public Partnership) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இம்முறையில் துறைமுகத்தில் அலைநீர்த் தடுப்பி (Breakwater), தூர்வாருதல் (Dredging), சரக்கு கையாளும் வசதிகள் போன்றவற்றை தனியார் முதலீட்டின்மூலம் செய்து துறைமுகத்தை இயக்கி, அதில் வரும் வருவாயில் ஒரு பங்கை ஒப்பந்த காலத்தில் கடல்சார் வாரியத்திற்கு அளிக்கப்படும். ஒப்பந்த காலம் முடிந்தவுடன் துறைமுகம்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

வாரியத்திடம் மீள ஒப்படைக்கப்படும். 4-6-2010 அன்று இதற்கான ஒப்பந்தப்புள்ளி பெறப்பட உள்ளது.

22. நாகை மாவட்டம் நெய்தவாசல் மற்றும் பெருந்தோட்டம் அருகே தோணித்துறை

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுகா நெய்தவாசல் மற்றும் பெருந்தோட்டம் அருகே திருவாளர்கள், சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பெனி மற்றும் எம்பீ.பவர் நிறுவனத்தினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர்களது 1800 மெகாவாட் மற்றும் 1200 மெகாவாட் திறனுள்ள இரு அனல்மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கையாளுவதற்கு சுமார் ரூ.300 கோடி செலவில் அமைக்கவுள்ள தோணித்துறைக்கான கொள்கை அளவிலான அனுமதியை கடல்சார் வாரியம் வழங்கியுள்ளது. அதற்கான துறைமுக எல்லைகள் வரையறுக்கப்பட்டு வருகின்றன.

23. இராமேஸ்வரத்தில் சுற்றுலா படகுப் போக்குவரத்து

வங்காள விரிகுடாவில், இராமநாதபுரம் மாவட்டம், அக்னி தீர்த்தம் என்ற சுற்றுலா தலத்தில் பயணிகளை கவரும் வகையில் புதிய திட்டமாக படகு போக்குவரத்து தனியார்மூலம் நடத்த தமிழ்நாடு கடல்சார் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. தோணித்துறை போன்ற கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தபின் படகு போக்குவரத்து துவங்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS